★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 10உ வெள்ளி (23—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 11உ சனி (24—3—56) [இதழ் 240

தொடை நடுங்கிகள்!

டில்லி மக்கள் சபையில் வாய் திறந்து ஒரு முறைகூடப் பேசாதவர்களை தோழர் வி. வீராசாமி தொடை நடுங்கிகள் என்று கூறியிருக்கிறார்.

'உறுப்பினர்களால் பேச முடியாது என்பதல்ல; வெளியில் பேசுகிறார்கள். ஆனால் மக்கள் சபையில் பேசுவதற்கு அவர்களுக்கு தொடை நடுக்கம் கண்டுவிடுகிறது,' என்று தோழர் வீராசாமி குறிப்பிட்டிருக்கிறார்.

'மக்கள் சபையில் ஒரு முறைகூடப் பேசாதவர்கள் சுமார் 5 முதல் 10 சதவிகிதம் வரை இருக்கலாம்' என பார்வையாளர் கணக்கிட்டிருக்கின்றனராம்!

மண்டியிட்டு மன்றாடினோம்! மாரடித்தோம்!

சாவடி தூக்கினோம்! நியாயம் கேட்டு வாதிட்டோம்!

கெஞ்சினோம்-மிஞ்சினர்! கொஞ்சினோம்-சீறினர்!

கால் கடுத்தது! நா உலர்ந்தது!

ரூ. 400 கோடிக்குத் திட்டம் தீட்டினோம்; ரூ. 190 கோடியாகக் குறைத்துப் போட்டனர்!

காமராசர் ஆட்சியின் தோல்வியை விளக்குகிறார் தொழிலமைச்சர்

7,100 கோடி ரூபாயை மொத்த மதிப்பீட்டுத் தொகையாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் கொண்டிருக்கிறது.

அத்தொகையில் அரசாங்கத் துறைக்கு ரூ. 4,800 கோடியும், தனியார் துறைக்கு ரூ. 2,300 கோடியும் வரையறை செய்யப்பட்டு இருக்கிறது.

அரசாங்கத் துறையில் இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது, அத்துறைக்கென முதல் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதைவிட இரண்டு மடங்குக் கூடுதலாகும்.

அத்தொகையில் மாகாண அரசாங்கங்களின் சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ 2,214 கோடியாகும்.

விவசாயம், நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகிய மூன்றின் அபிவிருத்தியையும் அடிப்படையாகக்கொண்டு முதல் திட்டம் உருவாக்கப்பட்டது.

இரண்டாவது திட்டமோ தொழில், கனிப்பொருள் போன்றவைகளின் வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டு இருக்கிறது.

(3-ம் பக்கம் பார்க்க)

அண்ணா - சம்பத் வால்பாறை வருகை

ஊராட்சிமன்றம் வரவேற்பு அளிக்கும்

21—3—56-ல், வால்பாறை ஊராட்சி மன்றக் கூட்டம், தலைவர் ஜே. பி. ஜெபக்கினி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, 25—3—56-ல் சி. என். அண்ணாதுரை அவர்களும், ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் வால்பாறைக்கு வருகை தரும்பொழுது, தலைவர்களுக்கு ஊராட்சி மன்றத்தின் சார்பாக வரவேற்பு இதழ் வாசித்தளிப்பதென, மன்றத்தின் துணைத் தலைவரும், அக்காமலைத்தோட்டம் தி. மு. கழகச் செயலாளருமாகிய திரு. இ. இராமசாமி அவர்களால் கொண்டுவரப் பெற்ற தீர்மானம், ஊராட்சி மன்ற உறுப்பினர் திரு. பி. கே. சதுரகிரி அவர்களால் வழிமொழியப்பட்டு, அதிகமான வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனையாம்பட்டித் தோழர்களுக்கு சிறைத் தண்டனை

அபராதம் வசூலிக்கவும் முஸ்தீபு

பிப். 20-ந் தேதி அர்த்தாலை முன்னிட்டு கைது செய்யப்பட்ட ஆனையாம்பட்டித் தோழர்களான ஆர். மாரிமுத்து, ராமு கோனார் ஆகியவர்கள்மீது வழக்கு நடைபெற்று, ஆத்தூர் சப்- மாஜிஸ்திரேட் அவர்களால் தலா ரூ. 5 அபராதம் விதிக்கப்பட்டது. தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறை புகுந்தனர்.

பின்பு சப்-மாஜிஸ்திரேட் அவர்கள் அத்தோழர்கள்மீது ஜப்தி வாரண்ட் பிறப்பித்து, ஜப்தி செய்துகொண்டு, 19-ந் தேதி விடுதலை செய்யவேண்டிய தோழர்களை 18-ந் தேதி 11-மணிக்கு விடுதலை செய்து விட்டனர்.

இச்செய்தி அறிந்ததும் ஆத்தூர் தி. மு. க. செயலாளர் பி. எம். ரங்கசாமி அவர்களும், கூட்டணித் தலைவர் பாஷாகான் அவர்களும், மற்றுமுள்ள தோழர்களும் சிறை வாசலுக்குச் சென்று, அத்தோழர்களுக்கு மலர் மாலைகள் அணிவித்து, ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

சிறை சென்ற தோழர்களுக்கும், மற்றுமுள்ள தோழர்களுக்கும் தோழர் ஏ. நாச்சிமுத்து தேனீர் விருந்தளித்தார்.

அதன்பின் அத்தோழர்களை பஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, எல்லோரும் வழி அனுப்பினார்கள்.

5 ஆண்டுகளில் 50 லட்சம் பேருக்கு வேலை

அம்பர் இராட்டையால் கிடைக்குமாம்

கதர் போர்டு கூற்று

புதுடில்லி, மார்ச் 22—

"நூல் உற்பத்திக்கு அம்பர் சர்க்காவை உபயோகிப்பதின் மூலம் அடுத்த ஐந்தாண்டுகளில், நூற்பவர்கள், தறி நெய்பவர்கள், தச்சு வேலைக்காரர்கள் உட்பட 50 - இலட்சம் பேர்களுக்கு முழுநேர வேலை கிடைக்கும்,"

என்று, கதர்போர்டு கருதுகிறதாம்.

"இந்த 50 இலட்சம் பேர் தவிர மேற்கொண்டு பத்து இலட்சம் பேர்களுக்குப் பகுதி நேர வேலை கிடைக்கும்; திட்ட காலத்தில் 25 இலட்சம் அம்பர் சர்க்காக்களை உபயோகிக்க வேண்டும். இதற்கு ரூ. 144 கோடி செலவிட வேண்டியிருக்கும்; ஒருவருக்கு தினம் 12 அணா வீதம் தந்தால் மொத்தம் ரூ. 300 கூலியாகக் கொடுக்கப்படும்.

ஆலைத் துணிமீது கெஜத்திற்கு ஒரு அணா தீர்வை விதித்தால் அம்பர் சர்க்காவிற்காக தரப்படக்கூடிய மானியம் ரூ. 80 கோடியாகவிருக்கும். இதில் உற்பத்தியாகும் நூல் மேற்கொண்டு 160 கோடி கெஜம் துணி உற்பத்தி செய்யப் போதுமானதாயிருக்கும்,"

என்றெல்லாம், கதர் 'போர்டு' புள்ளி விவரங்கள் தந்திருக்கிறது.

தம்மம்பட்டி தோழர்கள் மீது வழக்கு

சென்னை சர்க்காரின் அடக்குமுறை வெறி

பிப். 20-ந் தேதி நடைபெற்ற அர்த்தாலின்போது கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுவிக்கப்பட்ட கீழ்க்கண்ட தோழர்கள்மீது இ. பி. கோ. 143, 145, 109 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

ஆத்தூர் 'சப்-மாஜிஸ்திரேட்' கோர்ட்டில் ஆஜராகும்படி கீழ்க்கண்ட தோழர்களுக்கு 'சம்மன்'கள் அனுப்பப்பட்டன. அவ்வாறே 25 தோழர்களும் 21—3—56ல் ஆத்தூர் கோர்ட்டிற்கு வந்திருந்தனர். வழக்கைக் கவனிப்பதற்காக நாட்டாண்மைக் கழக உறுப்பினர் ஆனைமுத்து, ஆத்தூர் தி. மு. கழகச் செயலாளர் பி. எம். ரங்கசாமி, கே. எஸ். மணி ஆகியோர் வந்திருந்தனர்.

அத்தோழர்களிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டு, வழக்கை 29—3—56-ந் தேதி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சப்-மாஜிஸ்திரேட் அறிவித்து விட்டார்.

வழக்கு தொடரப்பட்டிருக்கும் தோழர்கள் :—

தம்மம்பட்டி :

இராமசாமி, அப்துல் மஜீத், ராஜி, சந்திரன், இராமானுசம், நடேசன்.

உலிபுரம் :

பாண்டுரங்கன், சந்திரன், ஜெகநாதன், ராமஜெயம், சீதாராமன் என்னும் உ. மு. அறிவாயுதன், வீ வையாபுரி, ஆ. தி. ர. துரைசாமி.

கூடமலை :

ஜி. என். பெரியசாமி (தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகத்தில் குண்டடிபட்டவர்), இராமலிங்கம். வெங்கடாசலம், சிங்காரம், கிருஷ்ணன், தம்பன், மாணிக்கம், துரைசாமி, கஞ்சமலை.

நாகியம்பட்டி :

பொன்னன் (தம்மம்பட்டியில் துப்பாக்கிப் பிரயோகத்தில் அடிபட்டவர் சிறுவன்), சீனன்.

செந்தாரப்பட்டி :

ஜம்புலிங்கம்.

பல வருடம் கழித்தே நிலச் சீர்திருத்தமாம்!

நிலப் பிரபுக்களுக்கு முதலமைச்சர் ஆறுதல்!

'நீங்கள் வேலை செய்யப் பழகிக் கொள்ளவில்லை; உங்கள் பிள்ளைகளை வேலை செய்யப் பழக்கினால் போதும். ஏனெனில், நிலச் சீர்திருத்தம் ஏற்பட அவ்வளவு நாளாகிவிடும். காங்கிரசில் பணக்கார ஆதிக்கமிருப்பதாகக் கூறப்படுகிறது; அது உண்மை அல்ல. அப்படியிருந்தால், நான் முதல் மந்திரியாக இருக்கமுடியுமா?"

என்று முதலமைச்சர் காமராசர் 21-3-56-ல் திருத்துறைப்பூண்டியில் 'கூட்டுறவு அர்பன் பாங்கி'யில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 'இராமலிங்கம் ஹாலை' திறந்துவைத்துப் பேசுகையில் கூறியுள்ளார்.

வேலையின்மை தீர பரீட்சார்த்தத் திட்டமாம்!

ரூ. 130 கோடிசெலவிடப்படுமாம்; 2,40,000 பேருக்கு வேலையாம்

புதுடில்லி, மார்ச் 21—

படித்துவிட்டு வேலையின்றித் தவிப்போர் பிரச்சினையைப் பரிசீலனை செய்வதற்கான திட்டக் குழுவின் பிரிவு, சில விசேட திட்டங்களைச் சிபாரிசு செய்திருக்கிறதாம்.

இச்சிபாரிசுகளை நிறைவேற்ற ரூ. 130 கோடிசெலவாகுமென்றும், 2,40,000 பேருக்கு வேலை கிடைக்கக்கூடுமென்றும் மக்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது

படித்தவர் என்றால், மெட்ரிகுலேஷனுக்கு மேல் படித்தவர் என்பதுதானாம்!

'இலங்கைக்கு உரிமை இல்லை'

தனுஷ்கோடியிலிருந்து சில மைல் தூரத்தில் உள்ள கச்சா தீவு தனக்குப் பாத்தியப்பட்டது என்று இலங்கை கூறமுடியாது; இந்தத் தீவு இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்தது என்பதற்கான தஸ்தாவேஜுகளை, இலங்கை சர்க்காருக்கு நாம் காட்ட முடியும்,'

என்று, இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவரான பி. என். சக்ரவர்த்தி, டில்லி செல்லும் வழியில் சென்னை நகரில் தெரிவித்திருக்கிறார்.

ரஷ்ய நிபுணர்கள் பயிற்சியளிப்பர்!

இந்திய இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளில் அலுவல்களை மேற்கொள்ளுவதற்காக இந்தியத் தொழிலாளருக்கும் தொழில் நுட்பத் துறையில் எஞ்சினீயர்களுக்கும் சோவியத் நிபுணர்கள் பயிற்சி அளிப்பார்களாம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 23—3—'56 வெள்ளி

செவிசாய்ப்பது ஏது?

★

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மாகாணங்களைத் திருத்தி அமைப்பது பற்றிய திட்டவட்டமான முடிவுக்கு இந்தியப் பேரரசு வந்துவிட்டது. அம்முடிவு மசோதா உருவமும் பெற்றுவிட்டது.

இனி அம்மசோதாவின்மீது ஒவ்வொரு மாகாண சட்ட சபைகளிலும் விவாதம் நடைபெறும். அதுபற்றி விவாதிக்கத்தான் ஒவ்வொரு சட்ட சபைகளுக்கும் உரிமை இருக்கிறதே அல்லாது, தனித்தனியாகத் தங்களைப் பாதிக்கும் விவகாரங்களில் கணிசமாகமாற்றம் செய்யும் அதிகாரம் எவற்றிற்கும் கிடையாது.

எனவே, புதிய மசோதா மீது சட்டசபைகள் புரியும் விவாதம் வெறும் ஜனநாயகச் சம்பிரதாயமேயாகும். அதில் உண்மையான மக்கள் கருத்து பிரதிபலிப்பதற்கு ஒரு துளியும் இடம் கிடையாது.

சட்ட சபைகளில் நடைபெறும் விவாதம் வெறும் கண் துடைப்பு வேலை. உலக ஜனநாயக அரசுகளை மயக்குவதற்கு இந்திய அரசாங்கம் மேற்கொண்டுவரும் ஜனநாயகக் கண்கட்டு வித்தைகளில், இந்த விநோத விவாதமும் ஒன்றாகும்.

குறிப்பிட்ட ஒரு மாகாணத்துக்கு, பிரஸ்தாப மசோதாவில் நியாயமான அதிருப்தி இருந்த போதிலும்கூட, அதைக் குறித்துக் கூறுவதோடு அமைய வேண்டுமே அல்லாது, அதை ஒரு காரணமாகக் கொண்டு, மசோதாவை நிறைவேற்றாது உதறித் தள்ளக்கூடாது. எந்த வகையிலும் மசோதாவை, தரப்பட்ட உருவத்துடன் சட்ட சபைகள் நிறைவேற்றிவிட வேண்டும்.

மாகாணங்கள் அனைத்திலும் காங்கிரஸ் கட்சியே ஆட்சிப் பீடத்தில் இருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்ட சபை உறுப்பினர்கள், அதிருப்தி தரும் பகுதிகளை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டலாமே ஒழிய, மசோதாவிற்கு எதிராக வாக்களிக்கக்கூடாது என காங்கிரஸ் மேலிடம் கட்டளை பிறப்பித்து இருக்கிறது. இப்படி காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களின் உரிமைக்குத் தடை விதித்துவிட்டு, காங்கிரஸ் மேலிடம் ஜனநாயக நாடகம் நடத்திக் காட்டிவருகிறது.

மொழிவழி மாகாணம் கூடாது என்பதில் காங்கிரஸ் மேலிடம், முன்னாள் கூற்றுக்கு மாறாகப் பிடிவாதம் பேசின போதிலும், ஆந்திர மொழிவழியினரைப் பொறுத்தவரையில், அந்த மொழியை அடிப்படையாகக் கொண்டே ஆந்திர மாகாணத்துடன் தெலிங்கானா பகுதியை இணைத்துவிட்டிருக்கிறது. ஆனால் 'விசால ஆந்திரம்' என அதற்குப் பெயரிடுவதற்குப் பதில் 'ஆந்திரா—தெலிங்கானா' எனப் பெயரிடுவதின் மூலம், தனது பிடிவாதம் வெற்றி பெற்றதாக பாவனை செய்துகொள்ளுகிறது காங்கிரஸ் மேலிடம்.

அதே போன்றுதான், பஞ்சாப் மாகாண விவகாரத்திலும் காங்கிரஸ் மேலிடம் நடந்துகொண்டு இருக்கிறது. பஞ்சாபுடன் இமாசலப் பிரதேசத்தை இணைத்தால் இந்துக்களின் எண்ணிக்கை கூடி, சீக்கியர்கள் சிறுபான்மையினராக மாறிவிடுவார்கள் என்பதற்காக, அப்பிணைப்பை சீக்கிய அகாலி தளத்தினர் எதிர்த்து வந்தனர்.

சீக்கிய மொழியையும் ஒரு ஆட்சி மொழியாகக் கொள்வதுடன், அம்மொழியை அடிப்படையாகக்கொண்டு மாகாண அமைப்பு இருக்க வேண்டும் என்றும் அகாலி தளத்தினர் கோரிவந்தனர். அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவந்த காங்கிரஸ் மேலிடம், அகாலியர் கோரிய முழு உருவ அளவில் பஞ்சாப் மொழி மாகாண ஏற்பாட்டிற்கு இணங்க மறுத்த போதிலும், பஞ்சாப் மாகாணத்தை—மொழியை அடிப்படையாக வைத்து 'பஞ்சாப் மொழி வட்டம்—இந்தி மொழி வட்டம்' என்ற இரு வட்டங்களை சிருஷ்டித்து உள்ளனர். இரண்டு மொழி வட்டங்களுக்கும் தனித்தனியான நிர்வாகக் குழுக்களை நியமித்து உள்ளனர்.

மாகாண அரசாங்கத்தை அச்சுறுத்திப் பணியவைக்கும் முனைப்பு அந்த இரு நிர்வாக குழுவுக்களுக்கும் இலைமறைகாயாக இருந்து வருகிறது.

சீக்கியர்களை திருப்திப்படுத்துவதில் காங்கிரஸ் மேலிடத்திற்கு அக்கறை இருக்கிறது. ஆந்திரர்களைசமாதானப்படுத்துவதில் காங்கிரஸ் மேலிடத்திற்கு ஆர்வம் இருக்கிறது. ஆனால் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் மட்டும் காங்கிரஸ் மேலிடத்திற்கு அக்கறை இல்லாததுடன் மட்டுமல்லாது அலட்சியமும் இருக்கிறது.

ஏன் இந்த இரட்டைப் போக்கு?

சீக்கியர் மிரட்டுகின்றனர்—ஆந்திரர் அச்சுறுத்துகின்றனர்—காங்கிரஸ் மேலிடம் அவர்களுக்குக் குனிந்து கொடுக்கிறது. நியாயம் வளைகிறது, துவண்டு பணிகிறது!

இங்குள்ள காங்கிரஸ் தமிழர்களும், அவர்களின் தலைவர் என்ற பெயரில் உலாவி வரும் முதலமைச்சரும், நியாயம் கோருவதில் கவலையற்றவர்களாகவும், தட்டிக் கேட்பதில் நெஞ்சத் துணிவு இல்லாதவர்களாகவும், பதவியிலிருப்பதே போதுமென்ற மனம் படைத்தவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

தேவிகுளம் - பீர்மேடு என்ற வழக்கப் பெயர்களை, 'பல்லிமேடு'—'பனங்குளம' எனக் கேலி பேசும காமராசர் அல்லவா தமிழர்களின் தலைவர் என்ற போர்வையில் உலாவி வருகிறார்? எங்கே, தமிழ் மக்களின் நியாயமான விருப்பங்களுக்குக் காங்கிரஸ் மேலிடம் செவி சாய்ப்பது?

'மாணவர் காங்கிரஸ்' 'இளைஞர் காங்கிரஸ்' என்ற நிறுவனங்களுக்கு எவர் பொறுப்பாளி?

தொழில் துறையில் பயிற்சியளிக்க டில்லி திட்டம்

சென்னை மாநிலத்தில் மூன்று பள்ளிகள் நிறுவப்படுமாம்

சென்னை மாநிலத்தில் தொழிற்சாலைகள் உள்ள முக்கியமான மூன்று இடங்களில் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வேலை நுட்பப் பயிற்சி அளிப்பதற்குப் பள்ளிகள் துவங்கவிருப்பதற்கான திட்டம் ஒன்றை டில்லி சர்க்கார் தயாரித்திருக்கிறார்களாம்.

இந்தத் திட்டத்தை டில்லி சர்க்கார் சென்னை சர்க்காரைக் கலந்துகொண்டு அமுல் நடத்துவார்களாம்.

இந்தத் தொழிற்பள்ளிகளில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி பெறுவோருக்கு 'தேசீய டிப்ளமோ' பட்டம் வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

மேற்கூறிய பயிற்சி பள்ளிகளில் ஒன்று சென்னை நகரத்திலும், மற்றொன்று கோவையிலும் அமையும் என்றும், மூன்றாவது எங்கு அமைப்பது என்பது இன்னும் முடிவாகவில்லை என்றும் கூறப்படுகிறது.

சென்னை நகரில் ஏற்படும் அந்தத் தொழிற்பள்ளியை நகரில் உள்ள தொழில் அதிபர்கள் கூட்டுச்சேர்ந்து நடத்துவார்கள் என்றும் தெரியவருகிறது.

கோவாவை விட மாட்டோம்!

கோவா குறித்து பிரதமர் நேரு மக்கள் சபையில் பேசியதை ஒட்டி, போர்ச்சுகீசிய சர்க்கார் நிர்வாகத்திற்குட்பட்ட கோவா வானொலி, 'கோவாவை போர்ச்சுகல் ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டாது' என்று அறிவித்திருக்கிறதாம்!

பிரெஞ்சு இராணுவம் வெளியேறும்

டில்லி, மார்ச் 21—

"தென் வியட்நாமிலிருந்து பிரெஞ்சுப் படைகள் அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களில் முடிவாக வெளியேறிவிடும்"

என்று பிரதமர் நேரு, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

சென்னை மாநிலத்தில் உப்பு அபிவிருத்தி வேலைகளுக்கு ரூ. 15 இலட்சம் செலவழிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

தமிழர் நலனை இப் 'பெரியவர்' பாதுகாக்கும் இலட்சணம் தெரியாதா?

மாணவர் கழக ஆண்டு விழாவில் மதியழகன்

மாணவர்கள் பற்றி முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்ட சில பொருந்தாக் கூற்றுக்களுக்குப் பதிலளித்து, துறையூர் மாணவர்களிடைப் பேசுகையில், தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"பிப்ரவரி 20—பொது வேலை நிறுத்தத்தில் மாணவரின் மகத்தான அணிவகுப்பு, காமராசருக்குக் கலக்கத்தையும் மருட்சியையும் கொடுத்துள்ளது. எனவேதான், 'மாணவர்களே! நீங்கள் படிப்பைக் கவனியுங்கள்; பெரியவர்கள் அரசியலைப் பார்த்துக் கொள்வார்கள்' என்று கல்லூரிக் கூட்டம் ஒன்றில் அவர் புலம்பியுள்ளார். மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளக் கூடாது என்ற காமராசரின் திடீர் உபதேசம் விசித்திரமானது. இந்த ஞானோதயம், காங்கிரஸ் கட்சியினரின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களை அழைத்தபோது வராததேன்? காங்கிரஸ் கட்சியின் சார்பில் நடைபெற்ற எத்தனையோ பள்ளி, கல்லூரி வேலை நிறுத்தம் குறித்து இவர் ஒரு வார்த்தை கூறியதுண்டா? காந்தியார் 'யங் இந்தியா' பத்திரிகையிலே எழுதிய தலையங்கங்கள் தவறு என்று சொன்னதுண்டா? அவர் நேசிக்கும் அருமைத்தலைவர் ஜவகர்லால் நேரு, நூற்றுக்கணக்கான மாணவர்கள் மாநாட்டிலே முழங்கியிருக்கிறார்; 'அது கூடாது' என்று தடுத்ததுண்டா? அப்போதெல்லாம் அவர் குரலுக்கு மதிப்பில்லை என்றால், இப்போதுதான் என்ன செய்தார்?—காங்கிரசில் 'இளைஞர் காங்கிரஸ்,' 'மாணவர் காங்கிரஸ்' எனும் பகுதிகள் தேவையில்லை; பெரியவர்கள் அரசியலைப் பார்த்துக்கொள்வார்கள்; மாணவர்கள் படிப்பைக் கவனிக்கட்டும்-என்று, எந்தக் கமிட்டியிலாவது பேசியதுண்டா? மாறாக, 'இளைஞர் காங்கிரஸ்', 'மாணவர் காங்கிரஸ்' எனும் பகுதிகளை வைத்து மாணவரை வசீகரிக்க முயன்றும் முடியாததால், உபதேச முணுமுணுப்பில் ஈடுபடுகிறார்.

"பெரியவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்பதைத்தான் மாணவர்கள் காமராசர் விஷயத்திலேயே நன்றாக உணர்ந்திருக்கிறார்களே! தட்சிணப் பிரதேசமா? தமிழ் நாடா? — என்பதைக்கூடத் தெளிவாகத் தெரிவிக்க தைரியமில்லாத பெரியவர்களிடம், 'தமிழ் நாடு என்ற பெயர் எதற்கு—சென்னை என்றால்தான் பிறருக்குப் புரியும்' என்று கூறும் பெரியவர்களிடம், பட்டம் தாணு பிள்ளையின் ஆட்சியில் பட்டப் பகலில் பதினோறு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டும் அதனைக் கேட்பதற்கு வக்கு வகையற்று, வாய்மூடி மவுனியாய் இருந்த பெரியவர்களிடம் இன்னமும் நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைப்பது பேராபத்து என்று மாணவர்கள் கருதுகிறார்கள்,"

என்று, 18—3—56 அன்று, துறையூரில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாணவர் கிளையின் ஆண்டு விழாவில் பேசுகையில் தோழர் கே. ஏ. மதியழகன் குறிப்பிட்டார்.

துறையூர் திராவிட முன்னேற்றக் கழக மாணவர் கிளையின் முதலாம் ஆண்டு விழா துறையூர் பாரதி டாக்கீசில் விமரிசையாக நடைபெற்றது.

கொப்பம்பட்டி தோழர் கே. ஆறுமுகம் தலைமை தாங்கினார்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் மருதகாசி ஆண்டு அறிக்கை படித்தார்.

ஆண்டு விழாவை வாழ்த்தி அண்ணா, ஈ. வெ. கி. சம்பத் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன

பின்னர், தாத்தையங்கார் பேட்டை தோழர் ஏ. பி முத்துக் கருப்பன், துறையூர் தோழர் டி. பி. அழகமுத்து ஆகியோர் 'மாணவர் கடமை' குறித்துப் பேசினர்.

கடைசியாக, தோழர் கே ஏ. மதியழகன், தி. மு. க. மாணவர் கிளை குறித்தும், தமிழர் போராட்டம் குறித்தும், மாணவர் செயல்பட வேண்டியவகை குறித்தும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

செயலாளர் டி. பி. பொன்னுசாமி நன்றி கூறலுடன் விழா முடிவுற்றது. (ந. கி.)

சுபாஷ் போசைச் சந்தித்த 'காதை'

பர்மா சென்றிருந்தபோது முத்துராமலிங்கத் தேவர், தான் சுபாஷ்போசைச் சந்தித்ததாக—அவருடன் தொடர்பு கொண்டதாகத் தெரிவித்திருந்ததை, 'பர்மா நாடு' என்ற இரங்கூன் இதழின் ஆசிரியரான பெருமாள் என்பார் மறுத்துரைத்துள்ளார்.

'தேவர் வரவேற்புக் குழு'வின் செயலாளர் என்ற முறையில், தேவர் பர்மாவில் சுற்றுப்பயணம் செய்தபோது அவர் சென்றவிடமெல்லாம் கூடவே தான் சென்றதாகவும், அப்போது தேவர் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ சுபாசுடன்தொடர்பு கொண்டார் என்பதற்கு ஆதாரமே இல்லை என்றும் பெருமாள் கூறுகிறார்

சென்னையில் மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலை?

கிழக்கு ஜெர்மனியுடன் இந்தியா கூட்டாக சேர்ந்து நிறுவுமாம்

சென்னை, மார்ச் 21—

மோட்டார் சைக்கிள், மோட்டார் "டீசல் டிரக்குகள்" உற்பத்திக்காக விரைவிலேயே சென்னையில் மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று இந்தியா—கிழக்கு ஜெர்மனி கூட்டுமுயற்சியினால் ஏற்படும் என்று தெரியவருகிறது.

மூன்று கிழக்கு ஜெர்மன் நிபுணர்கள் இன்று சென்னை வந்து உத்தேசத் தொழிற்சாலையை துவங்குவதற்கான சாத்தியக்கூறுகளைப் பரிசிலனை செய்தனர் என்றும், துவக்கப்பட்டால் அந்தத் தொழிற்சாலை நாட்டின் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க உதவும் என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவிற்கு அமெரிக்கா தரும் உதவி நிதி

வாஷிங்டன், மார்ச் 21—

அமெரிக்காவின் அபிவிருத்தி உதவி நிதித் திட்டத்திலிருந்து ஏறக்குறைய 720 இலட்சம் டாலர் (ரூ. 3,420 இலட்சம்) இந்தியாவிற்குக் கிடைக்கும் எனத் தெரிகிறது.

இந்திய சர்க்கார், குறைந்த வருமானத்தினருக்கான குடியிருப்பு வசதித் திட்டத்தின் கீழ், பல்வேறு மாநிலங்களுக்கு, 1956 ஜனவரி வரை கடன் உதவியாக மொத்தம் சுமார் ரூ. 21,28,00,000 வழங்கியுள்ளனர்.

கழகங்களை எதிர்க்க ஆச்சாரியார் தூபமிடும் நோக்கமென்ன ?

காமராசருக்கு பொதுச்செயலாளர் உணர்த்துகிருர்

சென்னை 19-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் வாரப் போதுக்கூட்டத்தில், போதுச்செயலாளர் அவர்கள் ஆற்றிய சொற் பொழிவின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது. பிற் பகுதி இங்கு தரப்படுகிறது :

"'தமிழ் நாட்டைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்று கோருகின்றவர்கள் தேவிகுளத்திற்கு 500 மைலுக்கப்பாலுள்ள சென்னையில் அர்த்தால் நடத்தினர்கள்'—என்ற நேருவுக்குத் தாளம்போடும் வகையிலே காமராசர் பேசுகிருர் லயோலாக் கல்லூரியிலே! பேசினவர், பச்சையப்பன் கல்லூரியில் பேசியிருந்தால் நன்ருயிருந்திருக்கும் ?

"கல்லூரியிலே அரசியலைப் பற்றி பேசுகிருர் காமராசர். ஆனல், நாங்கள்கல்லூரிகளிலே அரசியலைப் பேசக்கூடாதாம். எங்களைப் பேச அழைக்கும் போதே சொல்லிவிடுகிருர்கள் — 'திருக்குறளைப் பற்றிப் பேசுங்கள்; இலக்கியத்தைப் பற்றிப் பேசுங்கள்; தமிழைப் பற்றிப் பேசுங்கள்'—என்று! ஆனல் இவர்கள் மட்டும் அங்கு அரசியலைப் பற்றிப் பேசலாமாம்—பொது மேடையில் பேசுவதைப்போல்! அதுவும் லயோலா கல்லூரியில் பேசியிருக்கிருர் காமராசர்!

"கூட்டணியினர் நோக்கம் தமிழகப் பகுதிகளை தாய்த் தமிழகத்துடன் சேர்ப்பதுதான்; தேர்தலுக்காக அல்ல கூட்டணி அமைந்தது. தேர்தலுக்கு அவசியமானல் கூட்டணி ஒன்று உருவாகலாம். ஆனல் இன்றுள்ள கூட்டணி தேர்தலுக்காகவல்ல!

"இவர்களின் போக்கை புரிந்துக்கொள்ள முடியவில்லையே' என்கிருர் காமராசர். காமராசரே, உமக்கு எப்படிப் புரியும்? உம்மால் எதைத்தான் புரிந்துக்கொள்ள முடிகிறது?

"இந்த கூட்டணியில் உள்ள கட்சிக்காரர்கள் தங்கள் கருத்துக்களை பகிரங்கமாகச் சொல்லப் பயப்படுகிருர்கள்—அச்சப்படுகிருர்கள்,' என்கிருர் காமராசர்.

"நாம், நமது கருத்துக்களை சொல்லப் பயப்படுகிருேமாம்! அச்சப்படுகிருேமாம்! சொல்கிருர், வீரர்! இவர் வீராதி வீரர்! நாம் கோழைகள்! இப்படி ஒரு மந்திரி பேசுகிருர் என்ருல் இவரை எதிலே சேர்ப்பது?

"பொது மக்களிடத்தில் நின்று, நாம், நம் கருத்துக்களை எடுத்துச் சொல்லி வந்திருக்கிருேம். சென்னையில் எத்தனையோ தடவை அண்ணு அவர்களும், நானும், மற்றத் தோழர்களும் கூட்டணி பற்றியும், அர்த்தாலைப் பற்றியும் தெளிவாகச் சொல்லியிருக்கிருேம். இப்படிப் பொதுமக்களிடை பேசும் நாம் கோழைகளாம்! இதுவரையிலும் பொது மக்களிடத்தில் தன் கருத்தை திட்டவட்டமாக சொல்ல முடியாத காமராசர் மாவீரராம்!

"'சென்னை ராஜ்யம்' என்றுள்ள பெயரை மாற்றி, 'தமிழ் நாடு' என்று பெயரிடும்படி கூறினல், 'சென்னை என்றே இருந்து வந்துவிட்டது; இப்பொழுது புதியதாக 'தமிழ் நாடு' என்று வைப்பது நன்ருக இல்லை' என்கிருர் காமராசர்.

"'தமிழ்நாடு என்பது புதுப் பெயராம். நீர்வைத்திருக்கிறீரே, உமது காங்கிரஸ் கமிட்டிக்கு—'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி,' 'கேரளக் காங்கிரஸ் கமிட்டி,' 'கன்னட காங்கிரஸ் கமிட்டி' என்று—ஏன் அதைக்கூட 'சென்னைக் காங்கிரஸ் கமிட்டி' என்று வைத்துக் கொள்வதுதானே?

"தமிழ் நாடு என்ற பெயர் அவ்வளவு நன்ருயில்லையாம்! ஒரு சர். சி. பி. இராமசாமி, சர். சி. வி. இராமன், சர். இராமசாமிமுதலியார் போன்றவர்கள், 'என்னய்யா, தமிழ் நாடு 'மெட்ருஸ்' என்றே இருக்கட்டுமே' என்ருல் அதில் அர்த்தமுண்டு; அவர்களெல்லாம் இலண்டனிலே, பாரிசிலே படித்தவர்கள்; ஆங்கில மோகம் அவர்களுக்கு இருக்கும்; அதனல் சொல்லுவார்கள். காமராசரே, நீர் எந்தக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலே படித்துவிட்டு வந்தீர்? தமிழ்நாடு என்று மாற்றுவதில் உமக்கென்ன நஷ்டம்?

"எனவே, தோழர்களே! அநீதியைத் தங்களிடம் வைத்துக்கொண்டு ஆட்சி நடத்துகிருர்கள் இவர்கள்!

"இந்தச் சமயத்தில் ஆச்சாரியார் காமராசருக்கு கூறுகிருர்—'மந்திரிகளின் பேச்சை மக்கள் கேட்டு அதன்படி நடப்பார்கள்; நீர் கழகங்களை எதிர்த்தால் பரவாயில்லை'—என்று! கழகங்களை எதிர்த்து, தான் எந்த கதிக்கு இப்போது ஆளானுரோ, அந்தக் கதி காமராசருக்கும் வரவேண்டும் என்று ஆசைப்படுகிருர், ஆச்சாரியார்! அதனல்தான் 'கழகங்களை எதிர்த்தால்கூட பரவாயில்லை' என்றுஉபதேசிக்கிருர்."

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இந்தியக் சப்பல் போக்குவரத்துக் கம்பெனிகள், வெளிநாடுகளில் மொத்தம் சுமார் 1,10,000 டன் நிறையுள்ள 17 கப்பல்களைக் கட்டுவதற்கு ஆர்டர்கள் கொடுத்தன: அவற்றில் மொத்தம் 33,500 டன் நிறையுள்ள ஐந்து கப்பல்கள் ஏற்கெனவே 'டெலிவரி' யாகியுள்ளன.

'பாகிஸ்தான் போர்தொடுக்கும் என்ற பயம் வேண்டாம்!

பிரதமர் நேரு அபயமளிக்கிருர்

"யுத்தம் ஏற்படும் என்று பயப்பட வேண்டாம்; ஆனல், ஏதேனும் நெருக்கடியான அவசரநிலை ஏற்படக் கூடும் என்பதையும் ஒதுக்கி விடுவதற்கில்லை.

"நமது அண்டை நாடான பாகிஸ்தான் போர் தொடுக்கும் என்றும், நாம் அந்தத் தாக்குதலைச் சமாளிக்கத் தயாராக இல்லை என்றும் உறுப்பினர்கள் அஞ்சுகின்றனர். அப்படியெல்லாம் அஞ்சத் தேவை இல்லை.

"சமீபத்திய நிகழ்ச்சிகள், எல்லையோரச் சம்பவங்கள் எல்லாம் நமக்குப் பயமூட்டக்கூடியனதான்; என்றலும், நாம் அவை குறித்து அதிகம் கவலை கொள்ளத் தேவை இல்லை.

"நமது அண்டை நாட்டிற்கு வேறொரு பெரிய நாட்டிலிருந்து (அமெரிக்கா) இராணுவ உதவி கிடைத்திருப்பதினல்—கிடைத்து வருவதினல்தான் நமக்கு இந்தச் சங்கடங்கள் எல்லாம் ஏற்படுகின்றன. இப்படித்தான் நாம் எண்ணவேண்டியுள்ளது"

என்று பிரதமர் நேரு, மக்கள் சபையில் தற்காப்பு இலாகா மானியக் கோரிக்கைமீது விவாதம் நடைபெறுகையில் குறுக்கிட்டுப் பேசும் போது குறிப்பிட்டிருக்கிருர்.

ஆலை நூல் விலை ரூ. 13-12-0 என்ருல் அம்பர் ராட்டை நூல்விலை ரூ. 25 ஆகும்

இருபதாம் எண் நூல் நூற்க முயன்ருல் பத்திலிருந்து "நாற்பது எண்வரை நூல் உருவாகும்!

அம்பர் இராட்டை நூலை கைத்தறியாளர் ஏற்கார்

நீர்வளிக் குண்டின் அபாயங்கள்

"நீர்வளிக் குண்டு வெடிப்பதினல் சிதறக்கூடிய ரேடியக் கிளர்ச்சியுள்ள் துகள்கள், பல்லாயிரம் சதுர மைல்கள் பரவி, பல ஆண்டுகளுக்கு ஆபத்தை உண்டு பண்ணும்,"

என்று, டாக்டர் லாப் என்பார், சர்க்கார் குழு ஒன்றிடம் சாட்சியமளிக்கையில் கூறியிருக்கிருர் எனத் தெரிகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் பசிபிக் மகா சமுத்திரத்தில் நடைபெற்ற சோதனைகளுக்குப் பிறகு அவர், இந்த விளைவுகள் குறித்து ஆராய்ச்சி நடத்தியிருக்கிருர்.

நீர்வளிக் குண்டினல் ஏற்படும் அபாயம் குறித்து சர்க்கார் குழுவிடம் கருத்தறிவிக்கும்போது, 'சர்க்கார், விளைவுகளை குறைத்துக் கூற விரும்புபவர்கள்' என்றும் கூறினராம்,

காஷ்மீர் பற்றி 'சீட்டோ' கவுன்சில்

பண்டித நேரு கண்டனம்

"காஷ்மீர் விவகாரத்தை, 'சீட்டோ' கவுன்சில் கராச்சியில் கூடியபோது, அந்தக் கவுன்சில் உறுப்பினர் நாடு ஒன்றினை வைத்துக்கொண்டு விவாதிப்பதைச் சரி என எண்ணியதும், கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில் இதனைச் சேர்க்கவும் முற்பட்டது ஆச்சரியமானதுதான்.

"நம்மைப் புண்படுத்தும் இந்த அறிக்கையை வெளியிடுவதற்குக் காமன்வெல்த் நாடுகளான ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து ஆகியவையும் கூட்டாளிகளாயிருந்திருப்பது காண நாம் வருந்துகிருேம்.

"பாகிஸ்தானுக்கும் — இந்தியாவிற்கும் இடையில் உள்ள தகராறுகளில் பாகிஸ்தானுக்கு இராணுவக் கூட்டு பின்பலமாக நிற்கிறது என்றே, காஷ்மீர் பற்றி 'சீட்டோ' விவாதித்தது பொருள்படும்,"

என்று, பிரதமர் நேரு, மக்கள் சபையில் பேசுகையில் தெரிவித்திருக்கிருர்.

அம்பர் இராட்டை நிலை பற்றி விளக்கம்

"தற்போது 100 இடங்களில் அம்பர் ராட்டைகள் பரிசோதனைக்காக இயக்கப்பட இருக்கின்றன. உற்பத்தி அளவு முதலிய கணக்குகளை இப்போது கணக்கிட்டுச் சொல்வது கடினம்.

"திறமையாகச் செயலாற்றும் ஆலையில் ஒரு கதிரில் 8 மணி நேரத்தில் 6 அல்லது $6\frac{1}{2}$ அவுன்சு நூல் நூற்க முடியும். மோசமான ஆலைகூட அந்த நேரத்தில் 5 அவுன்சுக்குக் குறைவாக நூற்காது.

"அம்பர் சர்க்காவில் 4 அவுன்சு நூற்கலாம் என்று தீவிர அனுதாபிகளும், 1 அவுன்சுதான் நூற்கலாம் என்று ஐயப்பாடு உள்ளவர்களும் கருதுகின்றனர்.

"உயர்ந்த அளவு உற்பத்தி மதிப்பையே வைத்துக் கொண்டு ஆலைக்கும்—அம்பர் ராட்டைக்கும் இடையே ஒப்பிட்டால் கீழ்வரும் கணக்கு, கிடைக்கும்.

"ஒரு கட்டு (10 ராத்தல்) நூல் நூற்க ஆலைக்குப் பஞ்சு ரூ. 10 மதிப்புக்கும், உழைப்பு ரூ. 3-12-0 (அதாவது கட்டு ஒன்றுக்கு 6 அணு வீதம்) மதிப்புக்கும் ஆகும். அதாவது 1 கட்டு நூலுக்கு உற்பத்திச் செலவு ரூ. 13—12—0 ஆகும்.

"பஞ்சை பட்டை அடித்து, அதை அம்பர் இராட்டையில் 10 ராத்தல் நூல் நூற்க 15 நாள் பிடிக்கும். பஞ்சுக்கு ரூ. 10 வீதமும், கூலி தினத்துக்கு ரூ. 1 வீதம் உழைப்புச் செலவு ரூ. 15-ம் ஆக உற்பத்திச் செலவு ஒரு கட்டுக்கு ரூ. 25 ஆகும்.

"ஆலை நூலைவிட அம்பர் இராட்டை நூல் கட்டுக்கு ரூ. 11—4—0 அதிகமாகும். இந்தப் பேதம் சரிக்கட்டப்பட வேண்டும். எந்தக் கட்டத்தில் அதைச் செய்தாலும் கடைசியாக அந்தப் பளுவை, வாங்கி உபயோகிக்கும் மக்கள்தான் ஏதாவது ஒருவிதத்தில் தாங்கிக்கொள்ள நேரும். இதற்காக அரசாங்கம் மானியம் அளிப்பதாக இருந்தால், மானியம் அளிப்பதைவிட நேராகவே அந்தத் தொகையை தருமம் செய்து விடலாம்."

—என்று, 'அம்பர் ராட்டையின் பொருளாதாரம்' என்பது பற்றி கோவை சுழற்குழு வாராந்திரக் கூட்டத்தில், பஞ்சாலைத் தொழிற்சாலை நிபுணர்களில் ஒருவரான திரு. கே. சீனிவாசன் (கோவை கஸ்தூரி ஆலை நிருவாகி) அவர்கள், 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நாட்டில் புதிதாகக் கொண்டுவரப்பட இருக்கும் அம்பர் சர்க்கா, பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் மனநிறைவு தரக்கூடியதாக இருக்குமா' என்பதில் ஐயப்பாடு தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது :—

"நூற்பு வேலை மூன்று பகுதிகளாக நடைபெறவேண்டும். முதலில் பஞ்சக் கொட்டை அழுக்கு நீக்குவது; இரண்டாவதாக ஒழுங்கான திரி ஆக்குவது; பிறகு நூற்பது.

"சாதாரண ராட்டையில் நூற்பு விட்டுவிட்டு நடக்கும்; அம்பர் ராட்டையில் நூற்பு தொடர்ந்து நடக்கும்; ஆனல், திரியின் ஒழுங்கும், நூலின் தரமும் நிறைய உழைப்புத் தேவையான திறமையைக் காட்டி செய்யப்படும் வேலையைப் பொறுத்ததாக இருக்கும்.

பெரும்பாலும் அம்பர் சர்க்காவின் பகுதிகள் மரத்தினலும், இரும்புப் பகுதிகள் நூற்பு ஆலைகளிலிருந்து கழிக்கப்பட்ட இரும்புச் சாமானகளாலும் செய்யப்படுகிறது. அம்பர் ராட்டை மிக நுட்பமானது அல்ல. ஆலைகளில்கூட 20-ம் எண் நூற்கும் இயந்திரத்தில் 19 முதல் 21-ம் எண் வரையுள்ள எந்த அளவிலாவது நூல் வரும். அம்பர் ராட்டையிலோ, 20-ம் எண்ணுக்கு என்று நூற்ருல் 10 முதல் 40 எண் வரை ஏதாவது ஒரு எண்ணில் நூல்வரும். அத்துடன் அடிக்கடி நூல் அறுந்தும் கூடப் போகும். அம்பர் ராட்டையில் உள்ள 4 கதிரில் ஒன்றில் நூல் அறுபட்டுவிட்டால் ராட்டையை நிறுத்தி விட்டுத்தான் சரிசெய்ய முடியும்.

"இந்த ராட்டையைப் பெரும் அளவில் தேசத்தில் புகுத்துவதற்கு முன்பு ஆலைக்காரர்களும், அம்பர் சர்க்காக்காரர்களும் அல்லாத விஞ்ஞானிகளைக் கொண்டு ஒரு குழு அமைத்து, அம்பர் ராட்டை அரசாங்க மானியத்தை எதிர்பாராது பொருளாதார சுயநிறைவுடன் இருக்க முடியுமா என்றும், இதற்குப் பதிலாக பொருளாதார சுயநிறைவு தரும் வேறு சிறு இயந்திரத்தை உற்பத்தி செய்வது சாத்தியமா என்பதையும் அரசாங்கம் ஆராயவேண்டும்."

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், 'அதிகம் பேருக்கு வேலை அளிப்பதுவே நோக்கமாக இருக்குமானல் அம்பர் ராட்டையைவிட கைராட்டையே மேலானதாக இருக்கும்' என்று குறிப்பிட்டார்.

"அம்பர் ராட்டை நூல் உற்பத்தி பெருகிவிட்டால்; அதை உபயோகப்படுத்துவதில் சிக்கல் வரும். கைத்தறி நெசவாளர்கள் அந்த நூலைப் பெரிதும் உபயோகிக்க விரும்பமாட்டார்கள். ஏனெனில், நெசவுக்கு ஆலை நூலே பெரிதும் விரும்பப்படுகிறது. ஒருக்கால் பிற்காலத்தில் ஆலைகள் நூலை நூற்று நெசவாளர்களுக்குக் கொடுத்துவிட்டு, அம்பர் ராட்டை நூல் வாங்கி ஆலைகள் நெசவு செய்யவேண்டும் என்று அரசாங்கம் கட்டுப்படுத்தவேண்டி வந்தாலும் வரலாம்" என்றும் அவர் சொன்னர்.

இந்தியாவில் அச்சு மை உற்பத்தி, 1954-ல் 1,675 டன்னுக இருந்தது 1955-ல் 2,090 டன்னுகப் பெருகிவிட்டது.

காமராசர் ஆட்சியின் தோல்வியை விளக்குகிறார் தொழிலமைச்சர்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னைக்குரிய பங்காக, ரூ. 393 71 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு திட்டத்தை சென்னை அரசாங்கம் உருவாக்கியது. அது 1955 ஆகஸ்டில் சென்னை சட்டசபையில் விவாதிக்கவும்பட்டது.

சென்னை திட்டம் குறித்து அதே ஆகஸ்ட் மாதத்தில் திட்டக் குழுவிடம் சென்னை அரசாங்கம் நடத்திய விவாதத்தின் பொழுது, சென்னை அரசாங்கத் திட்டத்தின் உத்தேச மதிப்புத் தொகையை ரூ 180 கோடி அளவுக்கு திட்டக்குழு குறைத்து விட்டது. பெரிய, நடுத்தரத் தொழில்களை சொந்தப் பொறுப்பிலேயே நிர்மாணிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்து இருக்கிறது எனக் காரணங்காட்டி, சென்னைத் திட்டத்தின் மதிப்புத் தொகையை, திட்டக் குழு பாதிக்குமேல் குறைத்துவிட்டது. உயர்ந்தபட்ச செலவாகக்கூடிய திட்டங்களுக்காக ரூ 184·66 கோடியையும், விடு கட்டல், குடி தண்ணீர் வசதி, தொழிலாளர் நலம் ஆகிய விலக்க முடியாதத் துறைகளுக்காக ரூ. 36·35 கோடிக்கும் சென்னை அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

இருக்கக்கூடிய பண நிலைமையைக் கருதி மேலும் 5 சத விகிதம் குறைக்கப்பட்டு, சென்னைத் திட்டத்தின் மதிப்பு இறுதியாக ரூ 170·3 கோடிக்கு முடிந்து இருக்கிறது.

கிராமக் கைத்தொழில்களுக்காகவும், சிறு தொழில் ஏற்பாடுகளுக்காகவும் அகில இந்திய ரீதியில் ஒதுக்கப்படும் மொத்தத் தொகையான ரூ. 200 கோடியில் சென்னையின் பங்கு ரூ. 25 கோடியாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுவதால், சென்னையின் இரண்டாவது திட்டத்தின் உத்தேச மதிப்பு ரூ. 190 கோடியாக இருக்கும்.

"இந்த ராஜ்யத்தின் கிராமப்புறங்களில் கணிசமான வேலையின்மை இருந்துவருகிறது. நிலத்தை மட்டுமே நம்பி வாழ்ந்து வரும் மக்களின் பெருக்கமும் ஏற்கனவே மிதமிஞ்சி இருந்து வருகிறது. இந்த உண்மை, திட்டக் குழுவிடம் உணர்த்தப்பட்டு இருக்கிறது. கிராமப்புறங்களில் தொழில் தரும் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர விசேஷ முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் திட்டக் குழுவிடம் வலியுறுத்திக் கூறப்பட்டு இருக்கிறது."

"தென்னாற்காடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்ற பலவகை நெய்வேலி பழுப்பு நிலக்கரி தொழில் திட்டந்தான், திட்டத்தில் இடம் பெற்றிருக்கும் ஒரே ஒரு முக்கிய தொழில் ஏற்பாடாகும்."

"தொழில் முன்னேற்றத்தில் இந்த ராஜ்யம் மிகவும் பின்தங்கிக் கிடப்பதால், இரண்டாவது திட்டக் காலத்தில் துவங்கப்பட இருக்கும் கனரகத் தொழில்களில் சிலவற்றை இங்கு நிறுவப்பட வேண்டியதின் தேவையை, இந்த அரசாங்கம் திட்டக் குழுவிடம் அடிக்கடி எடுத்துக் கூறிவந்திருக்கிறது."

"பகுதிகளில் சரிநிகரான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக, இரண்டாவது திட்ட காலத்தில் தொழில்களில் இடப்படும் பெருத்த மூலதனத்தை, ராஜ்யங்களுக்கிடை ஒழுங்காகப் பகிர்ந்துச் செலவிட வேண்டும் என்பதை, திட்டக் குழு கூட்டங்களில், சென்னை அரசாங்க சார்பில் கலந்துகொண்ட பிரதிநிதிகள், ஆணித்தரமாக வலியுறுத்தி உள்ளனர்."

"இக்கோரிக்கையை தத்துவ பூர்வமாக திட்டக் குழு ஒப்புக் கொண்டது. பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டு, தொழில்களை நிர்மாணிப்பதற்குரிய இடங்களைத் தேர்ந்தெடுப்பதில், சலுகை காட்டுவதற்கு இடமிருந்தாலும், நாட்டின் நானுபகுதிகளிலும் பொருளாதார சமநிலையை ஏற்படுத்தும் கொள்கை திட்டக் குழுவின் கவனத்தில் இருக்கும்."

"இக்கோட்பாடுகள், செயலளவில் காட்டப்பெறும் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அலுமினியம்—காகிதம் போன்ற சில பெருந் தொழில்களை இந்த ராஜ்யத்தில் துவங்குவதற்குரிய போதுமான வசதிகள் இருப்பதால், அவைகளை நிர்மாணிக்கும் விஷயத்தை அனுதாபத்துடன் இந்திய அரசாங்கம் கவனிக்கும் என நாம் நம்பிக்கையுடன் எதிர் பார்க்கலாம்."

என்றெல்லாம், மந்திரி பக்தவத்சலம், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட நகலை சென்னை சட்டசபை விவாதத்திற்காக தாக்கல் செய்து பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

குனியமுத்தூர் தி.மு. கழகத் தோழர்களுக்கு :

25—3—56 மாலை 6-30 மணியளவில், தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அக்கிப்பேட்டை-பெங்களூர் தி. மு. கழகத் தோழர்கட்கு :

25—3—56 காலை 10 மணியளவில், பேலிமட் ரோடு, ஆரம்பப் பள்ளியில், தோழர் டி. ஏ. துரைசாமி தலைமையில், மேற்படி கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். 'நமது இலட்சியம்' என்ற தலைப்பில் தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்கள் பேசுவார்.

கல்லக்குடி தி. மு. கழகத் தோழர்களுக்கு :

25—3—56 காலை 9 மணியளவில் தோழர் கோவிந்தன் அவர்கள் இல்லத்தில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

சென்னை 26-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு :

25—3—56 காலை 10 மணியளவில், கழகப் பணிமனையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும் அதுபோது கழக வளர்ச்சி நிதி ஆராயப்படும்.

கே. பி. காமாட்சி மறைவு

சென்னை, மார்ச் 22—

சிறந்த நாடக, சினிமா நடிகரும், பாடல்கள் புனைபவருமான கே. பி. காமாட்சி நேற்று காலை இயற்கையெய்தினார் என்ற சோகச் செய்தியறிய வருந்துகிறோம்.

மாலை நடைபெற்ற சவ ஊர்வலத்தில் தமிழ்நாட்டு நடிகர்கள் பலரும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

தோழரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். (ஆ.-ர்.)

வால்பாறையில் அண்ணா, சம்பத்

நிகழ்ச்சிகள்

25—3—56 காலை 10 மணியளவில், வால்பாறை வட்டார தி. மு. கழகக் கிளைகளின் சார்பில் கூட்டம் நடைபெறும்.

அண்ணா அவர்களும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் பேசுவர்.

தலைவர்களை, அஞ்சல் நிலையத்தின் முன்பு யானை மாலை சூட்டி வரவேற்கும்.

காலை 10-10: மாபெரும் ஊர்வலம்
" 10-30: ஊராட்சி மன்ற வரவேற்பு
" 11-00: 26 கிளைகளின் வரவேற்பும் — கூட்டமும்

அண்ணா தலைமையில்

எஸ். அப்பாவு-தனபாக்கியம்

திருமணம்

26—3—56 காலை 9 மணியளவில், ஈரோடு, பெரியார் நகர மண்டபத்தில், அண்ணா அவர்கள் தலைமையில், ஈரோடு தோழர் எஸ். அப்பாவு—தோழியர் தனபாக்கியம் திருமணம் நடைபெறும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்.

பொன்மலையில் எஸ். ஆர். யூ. அமைப்பு கூட்டம்

"31—3—56 மாலை 5-30 மணிக்கு பொன்மலையில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் தலைமையில் மேற்படி அமைப்பு சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பொன்மலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறோம்,"

என்று, அமைப்பாளர்கள் ஜி பராங்குசம், சச்சுடன் அறிவிக்கின்றனர்.

முத்துப்பேட்டை மாணவர் மன்றக்கூட்டம்

26—3—56 மாலை 4 மணிக்கு, முத்துப்பேட்டை கழக உயர்நிலைப் பள்ளியில், மாணவர் மன்றத்தின் சார்பில், தோழர் கண்ணதாசன் பேசுவார்.

கழகக் கூட்டம்

★

அக்கிப்பேட்டை-பெங்களூர்

சுபாஷ் நகர் திடலில்
25—3—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
ஜி. கிருட்டிணன்
பேசுவோர் :
இரா. சு. தங்கப்பழம்
மு. கோ. வேந்தன்
வே. இளஞ்சேரன்

★

தூத்துக்குடி :

சந்தணமாரியம்மன் கோவில் மைதானம்
25-3-56 மாலை 6-30 மணிக்கு
தலைவர் :
எம். சாகுல் அமீது
பேசுவோர்:
முகவை-ஆர்.எஸ். பாண்டியன்
எம். எஸ். சிவசுவாமி
எப். ஏ. ஜோசப்

★

திருமங்கலம் :

குமரன்கோயில் திடல்
25-3-56 மாலை 6-30 மணிக்கு
தலைவர் :
க. ம. வ. நடராசன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
எம். ஏ. இரசாக்
பெ. பிச்சை
ஆர். கே. வேலன்

★

திருவில்லிபுத்தூர்:

25—3—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
சி. பி. சிற்றரசு
மாலை 4 மணிக்கு மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

★

குன்னத்தூர் :

சந்தைத் திடலில்
26-3-56 இரவு 8-30 மணிக்கு
தலைவர் :
கே. என். நடராசன்
பேசுவோர்:
அண்ணா
ஈ. வெ. கி. சம்பத்

★

குன்றத்தூர் :

25—3—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
டி. என். சம்பந்தம்
பேசுவோர்:
மு. கருணாநிதி
பி. ஆர். கோகுலகிருட்டிணன்

தாணுவை ஆதரித்த உறுப்பினர் பனம்பள்ளி வீட்டில்'காவல்'வைக்கப்பட்டார்?

திருவனந்தபுரம் நீதிமன்ற விசாரணை

புரட்சி சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர் ஒருவரை, திரு-கொச்சி முதன் மந்திரி தன் வீட்டில் சட்டவிரோதமாக அடைத்து வைத்திருப்பதாகத் திருவனந்தபுரம் நீதிமன்றத்தில் புகார் செய்யப்பட்டது. அதை ஒட்டிப் போலீசார், முதன் மந்திரி வீட்டைச் சோதனையிட்டு, 'அது உண்மையல்ல' என்று நீதிமன்றத்திற்குத் தகவல் தந்திருக்கின்றனராம்.

நாராயணன் போத்தி என்ற அந்த சட்டசபை உறுப்பினர், பட்டம் தாணு மந்திரி சபை அமைந்தால் ஆதரிப்பதாகத் தெரிவித்திருந்தாராம்.

பின்னர், நேற்று மீண்டும் இராஜப்பிரமுகருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், தாணு பிள்ளை இதர இடதுசாரிகளையும் கூட்டுச் சேர்த்துக்கொண்டு மந்திரி சபை அமைத்தால் தான் அதனைத் தான் ஆதரிப்பதாகத் தெரிவித்திருப்பதாயும், பட்டம் தாணு மட்டும் பி. சோ. கட்சி மந்திரி சபை அமைத்தால் அதனைத் தான் ஆதரிக்க முடியாது என்றும் அறிவித்துவிட்டிருப்பதாயும் தெரிய வருகிறது.

முதன் மந்திரி பனம்பள்ளி, இந்த உறுப்பினரைத்தான் அவர் வீட்டில் 'காவல்' வைத்ததாக அந்த உறுப்பினரின் தம்பி நீதிமன்றத்தில் புகார் செய்தாராம்.

★

சர்க்கார் ஊழியர்களுக்குச் சம்பளம் கிடைக்காது?

திரு-கொச்சியில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக, வரும் ஏப்ரல் முதல் தேதியன்று சர்க்கார் ஊழியர்களுக்குச் சம்பளம் தரப்படுமா என்பது சந்தேகத்திற்குரியதாயிருக்கிறதாம்.

ஏனெனில், இப்போது வரவு—செலவுத் திட்டம் 1956—57-ம் ஆண்டிற்குரியது; இன்னும் சட்டசபையில் விவாதிக்கப்படவில்லை; புது மந்திரி சபை அமைத்து சட்டசபை கூடுமானல், ஏப்ரல் 1-ந் தேதிக்குள் வரவு—செலவுத் திட்டம் தாக்கலாகிவிட முடியும்; இன்றேல், குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டால், வரவு-செலவுத் திட்டத்தை மக்கள் சபை விவாதித்து நிறைவேற்றுகிற வரையில், சர்க்கார் நிர்வாகச் செலவுகளைச் செய்ய குடியரசுத் தலைவர் தனது விசேட அதிகாரத்தை உபயோகிக்க வேண்டியிருக்கும். இந்த நெருக்கடியான நிலை குறித்து நிபுணர்கள் யோசித்து வருகிறார்களாம்.

தேவை

கீழ்க்கண்ட இடங்களில் 'நம் நாடு' இதழ்களை விற்பனை செய்ய, முன்பணம் கட்டக்கூடிய பொறுப்பு மிக்க ஏஜெண்டுகள் உடனே தேவை :—

திருச்சி
இராசபாளையம்
சிவகாசி
கடையநல்லூர்
திருநெல்வேலி
காஞ்சீபுரம்

—நிர்வாகி : 'நம் நாடு'

இராகவன் நினைவு நாள்

சென்னை 42-வது வட்ட தி மு. கழகச் சார்பில் 25—3—56 மாலை 6 மணிக்கு, திருவல்லிக்கேணி, பண்டி வெங்கடேசநாய்க்கன் தெருவில் கங்கைகொண்டான் மண்டபத்திற்கு அருகில் தோழர் பூ. அரங்கசாமி தலைமையில், மறைந்த தோழர் இராகவன் நினைவு நாள் நடைபெறும். அதுபோது, தோழர்கள் க. அன்பழகன், இளம்பரிதி ஆகியோர் பேசுவர்.

திரு.வி.க. மறுமலர்ச்சி மன்ற 3-ம் ஆண்டு விழா

25—3—56 மாலை 5½ மணிக்கு சென்னை—குயப்பேட்டை, கந்தசாமி கோயில் தெருவில், தோழர் ந கோவிந்தன் தலைமையில் மேற்படி ஆண்டு விழா நடைபெறும். தோழர்கள் ஆசைத்தம்பி, காஞ்சி-கல்யாணசுந்தரம், லோ. இளமாறன், என். கிருட்டிணன் பேசுவர்

மதுரை இளங்கோ மன்ற 4-ம் ஆண்டு விழா

25—3—56 மாலை 6 மணியளவில், மதுரை பாண்டிய வேளாளர் தெருவில், மேற்படி விழா, மன்றத்தின் முன்பாக நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், எஸ். முத்து சொற்பொழிவாற்றுவர்.

காவேரி ஆலை கதவடைப்பு

புதுக்கோட்டையிலிருந்து 7 மைல் தொலைவில் உள்ள வெள்ளனூர் காவேரி நூற்பு, மற்றும் நெசவு ஆலையில், நேற்று காலை முதல் நிர்வாகிகள் கதவடைப்புச் செய்துவிட்டிருக்கின்றனர்.

தொழிலாளர்கள் மெதுவாக வேலை செய்யும் கொள்கையைக் கடைப்பிடிப்பதின் விளைவாகவே கதவடைப்பு நடைபெற்றதாயும், தொழிலாளர்கள் ஆலைக்குள் தங்கிக்கொண்டு வெளிவர மறுப்பதாயும், இதுவரை அசம்பாவிதமான சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை என்றும், ஆயுதந்தாங்கிய போலீசார் ஆலையைப் பாதுகாத்து வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ